18th February 1959]

Type (B).—The silver iodide acetone solution is gravity-fed on a spinning disk which serves to distribute it within the flame tube where it is ignited and burnt. The latter type does not require a pressure feed and hence can be more suitable for use on light aircraft.

SRI N. K. PALANISAMI : இது சம்பந்தமாக ஆஸ்டிரேலியாவில் செய்யப்படுகிற பரீட்சை மிகுந்த வெற்றியை அளித்திருக்கும்போது நம் ராஜ்யத்தில் மட்டும் வெற்றி ஏற்படாதிருக்கக் காரணம் என்ன ? அவர்கள் கையாண்ட முறையில் ஏன் பயிற்சி செய்து பார்க்கக்கூடாது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எனக்குத் தெரிந்த வரையில் உலகத்தில் எங்கும் பரிபூரண வெற்றி இவ்விஷயத்தில் கிடைத்ததாகத் தெரியவில்லை. நாமும் நம்மால் முடிந்த அளவு பயிற்சி செய்து பார்க்கலாம்.

SRI V. SANKARAN : செயற்கையாக நீர் வரவழைப்பதற்கு பெண்களை அமர்த்தி பெருமளவு பலன் காணலாம் என்று ஒரு சில நிபுணர்கள் யோசனை கூறுகிறார்கள். இந்த யோசனையை சர்க்கார் கொண்டு பரீட்சித்துப் பார்க்க உத்தேசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்த நம்பிக்கை இந்த அரசாங்கத்திற்கு இல்லை.

SRI C. NATARAJAN : நம் அரசாங்கம் மழை பெய்வதற்கு எவ்வளவு பணம் செலவழித்திருக்கிறது. செலவழிக்கப்பட்டிருக்கக் கூடிய பணத்திற்கு ஏற்ற வகையில் ஆராய்ச்சி பலனளித்து வருகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தொகை எவ்வளவு என்று என்னிடம் கணக்கு இல்லை. இதுவரை செய்த ஆராய்ச்சியினால் எனக்கு நம்பிக்கை போகவில்லை.

Panamadangi Reseved Forest 9-40 a.m.

* 450 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1952 முதல் 1957 வரை வருடவாரியாக வட ஆற்காடு ஜில்லா குடியாத்தம் தாலுகா பனமடங்கி ரிஸர்வ் பாரஸ்டில் தழைகள் மூலமாக எவ்வளவு வருமானம் கிடைத்தது ?

(ஆ) கண்ட்ராக்ட் விடப்படுகிறதா ? அல்லது அதிகாரிகளே கவனிகிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The removal of manure leaves from the Panamadangi Reserve Forest of Gudiyatham taluk in North Arcot district was not leased out to the contractors; but only permits were issued departmentally. The revenue realised by the sale of manure leaf permits from 1952–53 to 1956–57 is given below :—

Years.	RS.
1952–53	35·00
1953–54	467·00
1954–55	510·00
1955–56	703·00
1956–57	295·00

[18th February 1959

Sri V. K. KOTHANDARAMAN : ஸார், ஏற்கனவே காண்ட்ராக்ட் விட்டுவிடப்பட்டதில் வந்த வருமானத்தை விட இப்பொழுது டிபார்ட் மெண்ட் மூலம் வரும் வருமானம் மிகக் குறைவாக இருக்கிறது. சர்க்கார் இந்தத் தழை காண்ட்ராக்டை அங்கு இருக்கக் கூடிய பஞ்சாயத்து எடுத்து நடத்துவதற்கு பஞ்சாயத்து மூலமாக சர்க்காருக்கு ஏதாவது லெட்டர் வந்துள்ளதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : முன்பு காண்ட்ராக்ட் விட்டதில் எவ்வளவு வருமானம் கிடைத்தது என்பதைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை. விவசாயிகள் சௌகரியத்தை உத்தேசித்து, அவர்களுக்கு பர்மிஷன் கொடுக்கப்பட்டது. அந்த முறைதான். இப்பொழுது கையாளப்பட்ட முறை. மற்றவர்களுக்கு விட்டுவிடுவதை விட, விவசாயிகளுக்கு பர்மிஷன் கொடுக்கவேண்டும் என்பது சிறந்த முறை என்று அரசாங்கம் கருதுகிறது.

Supply of manure and seeds

* 451 *Q.*—**Sri K. SATTANATHA KARAYALAR :** Will the Hon. the Minister for Home be pleased to state the quantity of manure and seeds distributed to agriculturists through the Shencottah Agriculture Office in 1957–58?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The quantities distributed (rounded to the nearest ton) are :—

Bonemeal—8 tons.

Superphosphate—5 tons.

Muriate of potash—1 ton.

Calcium ammonium sulphate—1 ton.

Paddy and other seeds—4 tons.

Compulsory Social Service for students

* 452 *Q.*—**Sri N. K. PALANISAMI :** Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to make compulsory social service for a student, a prerequisite for the grant of a University Degree?

The Hon. Sri C. SUBRAMANIAM : No, Sir.

Sri N. K. PALANISAMI : சமீபத்தில் யூனிவர்ஸிடி கிராண்ட் கமிஷன் முடிவு இது மாதிரி ஒரு யூனிவர்ஸிடியில் சேருவதற்கு முன்பு ஒரு வருடமாவது சோஷியல் சர்வீஸ் செய்யவேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்படும் என்பதின் மீது சர்க்கார் முடிவு செய்திருக்கிறதா ? என்ன நடவடிக்கை எடுத்தார்கள்.

The Hon. Sri C. SUBRAMANIAM : யூனிவர்ஸிடி கிராண்ட் கமிஷன் முடிவின் மீது நடவடிக்கை எடுத்ததாக தகவல் இல்லை.

Mr. SPEAKER : How can the hon. Member ask the Government about something that has happened in some other institutions?

Entertainment tax

* 453 *Q.*—**Sri P. G. MANICKAM :** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-ம் வருஷத்திலே சினிமாப் படங்கள் திரையிடப்பட்ட நாட்களிலே தமாஷ் வரி மூலம் எத்தனை ரூபாய்கள் வசூலிக்கப்பட்டன?